தலைமை நிர்வாக அதிகாரி, தமிழ்நாடு

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தின் தலைமை நிர்வாக அதிகாரியால் தற்போது எத்தனை அறக்கட்டளைகள் நிர்வகிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசுப் பொறுப்புச் சொத்தின் ஆட்சியாளர் அவர்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வரும் டிரஸ்டுகளின் எண்ணிக்கை 145 ஆகும்.

திரு. எம். ராஜா அய்யர்: இந்த அறக்கட்டளைகளின் மூலதனம் எல்லாம் கட்டாயமாக இங்குதான் இருக்கவேண்டுமென்று நிபந்தனை ஏதாவது இருக்கின்றதா? அல்லது எந்த வங்கியிலும் மூலதனத்தைப் போடலாமா? ஏனென்றால் அரசாங்கத்தில் இந்த மூலதனத்தைக் கொடுத்தால், மிகக் குறைவான வட்டி கொடுக்கப்படுகிறது. பிற வங்கிகளில் அந்த மூலதனத்தைக் கொடுத்து அறக்கட்டளையை ஏற்படுத்தினாலும், அதையும் இந்த நிர்வாக அதிகாரி அவர்களுடைய நிர்வாகத்திற்குள்ளே ஏற்றுக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது உயர்நீதி மன்றங்கள் நிர்வகிக்கின்ற பொறுப்பாகும். எதெதற்கு அந்தப் பணத்தை இன்வெஸ்ட்மென்ட் செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை.

Raids on Cinema Houses

* 28. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the raid conducted by the officials of the Commercial Taxes Department on Cinema Houses in Madras City during March and April 1972?

திரைப்பட அரங்குகளில் திடீர்ச் சோதனைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில், 1972, மார்ச்-ஏப்ரல் திங்களில், திரைப்பட அரங்குகளில் வணிக வரித் துறை அதிகாரிகள் நடத்திய திடீர்ச் சோதனைகளின் விவரங்கள் யாவை?

1973 பிப்ரவரி 6]

THE HON. THIRU P. U. SHANMUGAM: The Commercial Tax Officials conducted 15 raids on cinema houses in Madras City during March 1972 and no irregularities were noticed. No raid was conducted during April 1972.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள சினிமாக் கொட்டகைகளை எல்லாம் அரசுடைமையாக்கப் போவதாக முதலமைச்சரவர்கள் அண்மையிலே கூறியிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி ஒரு கருத்து அரசுக்கு இருக்கிறதா என்பதையும், அப்படி இருக்குமானல் எப்போது எடுத்துக்கொள்வதாக உத்தேசம் என்பதைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அப்படி ஒரு காலம் வரலாம் என்று சொன்னதாகத்தான் தகவலே தவிர, நான் செய்யப்போகிறேன் என்று சொன்னதாகத் தகவல் இல்லை. அப்படியெல்லாம் தேசியமயமாக்கப்படுகின்ற நாளில் சினிமாக் கொட்டகைகளை தேசியமயமாக்கப்படுகின்ற காலம் வரலாமென்றுதான் சொன்னதாக எனக்குத் தகவல்.

15 *Acre Ceiling*

* 29. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether it is a fact that the Government of India have recommended to the State Government that the 15 acre ceiling for agricultural lands in the State may be reduced further; and

(*b*) if so, the details of the recommendation?

15 ஏக்கர் உச்ச வரம்பு

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் வேளாண்மை நிலங்களுக்கான 15 ஏக்கர் உச்ச வரம்பு மேலும் குறைக்கப்படலாம் என்று மாநில அரசுக்கு மத்திய அரசு பரிவுரை செய்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அப்பரிவுரையின் விவரம் என்ன?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (*a*) and (*b*) The Union Minister for Agriculture, Government of India had forwarded in his letter No. 11-16/70, LRU, dated 18th September 1971